CNR NO: TNTH13-010668-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 1377/2023

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தேவாரம் காவல்நிலையம்,
குற்ற எண்.226/2023. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1).சலேத் (வயது 65/2026),
த/பெ.ராயப்பர்.

2).குழந்தை தெரஸா (வயது 69/2026),
க/பெ.சலேத்.

3).சலேத்துராணி மேத்யு (வயது 49/2026),
த/பெ.சலேத்.

4).செல்வராஜ் (வயது 66/2026),
த/பெ.சீனிவாசன். ..... எதிரிகள்

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

<table>
<tr><th>வ.எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td>குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>தேவாரம் காவல்நிலையம்.</td><td>எதிரிகள்:<br>1).சலேத்,<br>2).குழந்தை தெரஸா,<br>3).சலேத்துராணி மேத்யு,<br>4).செல்வராஜ்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | எதிரிகளின் வயது | 1).65/2026,<br>2).69/2026.<br>3).49/2026,<br>4).66/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | 1).த/பெ.ராயப்பர்,<br>2).க/பெ.சலேத்,<br>3).த/பெ.சலேத்.<br>4).த/பெ.சீனிவாசன். |
| 4. | மதம் | 1 முதல் 3 எதிரிகள் – கிறிஸ்தவர். |
| | | 4-வது எதிரி - -. |
| 5. | தொழில் | –. |
| 6. | முகவரி | 1 மற்றும் 2 எதிரிகள் - 241/W-2, செக்கடி தெரு, T.சிந்தலைச்சேரி. |
| | | 3-வது எதிரி - 269/W-2, போஸ்ட் ஆபிஸ் தெரு, T.சிந்தலைச்சேரி. |
| | | 4-வது எதிரி - 201/W-2, சாவடி தெரு, T.சிந்தலைச்சேரி. |
| 7. | தாலுகா, மாவட்டம் | 1 முதல் 4 எதிரிகள் – உத்தமபாளையம், தேனி மாவட்டம். |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 25.09.2023. |
| 9. | கைது | 1 முதல் 3 எதிரிகள் – 26.10.2023. |
| | | 4-வது எதிரி – 02.11.2023. |
| 10. | பிணையில் விடுவித்தல் | 1 மற்றும் 3 எதிரிகள் - 26.10.2023 (காவல்நிலையப் பிணை). |
| | | 2-வது எதிரி - 16.11.2023 (காவல்நிலையப் பிணை). |
| | | 4-வது எதிரி - 02.11.2023 (காவல்நிலையப் பிணை). |

<table>
<tr><td>11.</td><td>எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>12.</td><td>இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="4">24.11.2023.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="4">20.12.2023.</td></tr>
<tr><td>14.</td><td>கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="4">12.11.2025.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="4">04.02.2026.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="4">18.02.2026.</td></tr>
<tr><td rowspan="3">17.</td><td rowspan="3">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td colspan="2">Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.03.2026</td><td colspan="2">25.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.03.2026</td><td colspan="2">25.03.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="4">27.03.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="4">27.03.2026.</td></tr>
<tr><td rowspan="4">20.</td><td rowspan="4">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>25.03.2026</td><td>320(2) of Cr.P.C</td><td>1013/2026</td><td>Dismissed</td></tr>
<tr><td>25.03.2026</td><td>311 of Cr.P.C</td><td>1014/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>25.03.2026</td><td>294(3) of Cr.P.C</td><td>1015/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">இல்லை.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 23. | தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள் | 02.07.2025 முதல் 09.10.2025 வரை - 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்தது. |
| | | 28.05.2025 முதல் 03.07.2025 வரை - 4-வது எதிரி மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்தது. |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது. |

*****

இவ்வழக்கு 20.12.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 27.03.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 294(b), 448, 427, 506(1) இந்திய தண்டனைச் சட்டம் 1860-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **<u>இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு</u>**:

கடந்த 25.09.2023-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு வாதி ராணி பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருக்கும்போது, 1-வது எதிரி சலேத், 2-வது எதிரி குழந்தைதெரஸ், 3-வது எதிரி சலேத்துராணி மற்றும் 4-வது எதிரி செல்வராஜ் ஆகிய நால்வரும் அத்துமீறி வாதியின் வீட்டு காம்பவுண்டுக்குள் நுழைந்து, நான்கு பேரும் தேவிடியா பயலே, கண்டாரோலி என அசிங்கமாகப் பேசி, 1 மற்றும் 2-வது எதிரிகள், வாதி வீட்டின் முன்பு ஊன்றியிருந்த சுமார் ரூ.30,000/-ம் மதிப்புள்ள கம்பி வேலியை உடைத்து எறிந்தும், 1-வது எதிரி, வாதியின் குடும்பத்தாரை அவமானப்படுத்தும் நோக்கத்தோடு, வாதியின் வீட்டு வாசல் முன்பு செறுப்புகளை கட்டி வைத்தும், எதிரிகள் அனைவரும் உன்னையையும், உன் குடும்பத்தையும் கொலை செய்யாமல் விட மாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக, 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 427, 506(1)–ன் கீழும் மற்றும் 3 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழும் அரசுத்தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் பிரிவின் கீழ் 12.11.2025-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், 1 முதல் 4 எதிரிகள் மீது முகாந்திரம் எழுந்ததால், 04.02.2026-ஆம் தேதியன்று 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 427, 506(1)–ன் கீழும் மற்றும் 3 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, 1 முதல் 4 எதிரிகள் பொய் வழக்கு

என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்கள். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **<u>அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u>**:

5.1). அ.சா.1 திருமதி.ராணி சாட்சியத்தில், கடந்த 25.09.2023-ஆம் தேதி, காலை 09.00 மணியளவில், தான் வீட்டில் இருந்தபோது, பக்கத்து வீட்டில் இருக்கும் சலேத், குழந்தை தெரசு, அவர்களது மகள் சலேத்து ராணி, செல்வராஜ் ஆகியோர் தங்கள் வீட்டிற்கு வந்து, தங்களுடன் பிரச்சனை செய்தது குறித்து தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், **புகார் மனு அ.சா.ஆ.1** என்றும், தற்சமயம் தான், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டு, அதற்கான சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், **சமாதான மனு அ.சா.ஆ.2** என்றும், எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

5.2). அ.சா.2 சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி சாட்சியத்தில், கடந்த 25.09.2023-ஆம் தேதி, 20.00 மணிக்கு, சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் என்பவர் தேவாரம் காவல்நிலைய பொறுப்பில் இருந்தபோது, ராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, பரிசீலித்து, நிலைய குற்ற எண்.226/2023, இ.த.ச பிரிவுகள் 294(b), 427, 448, 506(i)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** என்றும், 25.09.2023-ஆம் தேதி, 21.30 மணிக்கு, சம்பவ இடம்

சென்று, சாட்சிகள் ஜேசு மற்றும் உவரி அந்தோணி முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலான நபர்களை விசாரித்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து, 1 முதல் 3 எதிரிகள் 26.10.2023-ஆம் தேதி நிலையத்தில் ஆஜரானவர்களை கைது செய்து, நிலைய பிணையில் விடுவித்து, 4-ஆம் எதிரியை 02.11.2023-ஆம் தேதி சிந்தலைச்சேரி பஸ் ஸ்டாப்பில் கைது செய்து, நிலையம் கொண்டு வந்து, நிலைய பிணையில் விடுவித்து, எதிரிகளுக்கு எதிராக வழக்கு விசாரணையை முடித்து, 02.11.2023-ஆம் தேதி இ.த.ச பிரிவுகள் 294(b), 427, 448, 506(i)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து 1 முதல் 4 எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(b) பிரிவின் கீழ் 27.03.2026-ஆம் தேதி வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதால், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7).**<u>தீர்விற்குரிய பிரச்சினை</u>**:

இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 427, 506(1)–ன் கீழும் மற்றும் 3 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றம் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

8.1). கடந்த 25.09.2023-ஆம் தேதி காலை 09.00 மணிக்கு அ.சா.1 ராணி பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருக்கும்போது, 1-வது எதிரி சலேத், 2-வது எதிரி குழந்தைதெரஸ், 3-வது எதிரி சலேத்துராணி மற்றும் 4-வது எதிரி செல்வராஜ் ஆகிய நால்வரும் அத்துமீறி அ.சா.1–ன் வீட்டு காம்பவுண்டுக்குள் நுழைந்து, நான்கு பேரும் தேவிடியா பயலே, கண்டாரோலி என அசிங்கமாகப் பேசி, 1 மற்றும் 2-வது எதிரிகள், அ.சா.1–ன் வீட்டின் முன்பு ஊன்றியிருந்த சுமார் ரூ.30,000/-ம் மதிப்புள்ள கம்பி வேலியை உடைத்து எறிந்தும், 1-வது எதிரி, அ.சா.1–ன் குடும்பத்தாரை அவமானப்படுத்தும் நோக்கத்தோடு, அ.சா.1–ன் வீட்டு வாசல் முன்பு செறுப்புகளை கட்டி வைத்தும், எதிரிகள் அனைவரும் உன்னையையும், உன் குடும்பத்தையும் கொலை செய்யாமல் விட மாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்கையில்,

8.2). அ.சா.1 ராணி தனது முதல் விசாரணையில், "**நான் சிந்தலைச்சேரியில் வசித்து, ஆசிரியராக பணி செய்து வருகிறேன். கடந்த 25.09.2023-ஆம் தேதி, காலை 09.00 மணியளவில், நான் வீட்டில் இருந்தபோது, பக்கத்து வீட்டில் இருக்கும் சலேத், குழந்தை தெரசு, அவர்களது மகள் சலேத்து ராணி, செல்வராஜ் ஆகியோர் எங்கள் வீட்டிற்கு வந்து, எங்களுடன் பிரச்சனை செய்தார்கள். அது குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர். தற்சமயம் நான், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டேன். அதற்கான சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சமாதான மனு அ.சா.ஆ.2. எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை**" என்றும் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமாக்கப்பட்டுள்ளார்.

8.3). அரசுத்தரப்பு குற்றச்சாட்டில் எதிரிகள் நால்வரும் அத்துமீறி அ.சா.1–ன்

வீட்டு காம்பவுண்டுக்குள் நுழைந்து, நான்கு பேரும் தேவிடியா பயலே, கண்டாரோலி என அசிங்கமாகப் பேசி, 1 மற்றும் 2-வது எதிரிகள், அ.சா.1–ன் வீட்டின் முன்பு ஊன்றியிருந்த சுமார் ரூ.30,000/-ம் மதிப்புள்ள கம்பி வேலியை உடைத்து எறிந்தும், 1-வது எதிரி, அ.சா.1–ன் குடும்பத்தாரை அவமானப்படுத்தும் நோக்கத்தோடு, அ.சா.1–ன் வீட்டு வாசல் முன்பு செறுப்புகளை கட்டி வைத்தும், எதிரிகள் அனைவரும் உன்னையையும், உன் குடும்பத்தையும் கொலை செய்யாமல் விட மாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றச்சாட்டு முன்னிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 ராணி தனது முதல் விசாரணையில், எதிரிகள், அத்துமீறி அ.சா.1–ன் வீட்டு காம்பவுண்டுக்குள் நுழைந்ததாகவோ, அசிங்கமாகப் பேசியதாகவோ, 1 மற்றும் 2-வது எதிரிகள், அ.சா.1–ன் வீட்டின் முன்பு ஊன்றியிருந்த சுமார் ரூ.30,000/-ம் மதிப்புள்ள கம்பி வேலியை உடைத்து எறிந்ததாகவோ, 1-வது எதிரி, அ.சா.1–ன் குடும்பத்தாரை அவமானப்படுத்தும் நோக்கத்தோடு, அ.சா.1–ன் வீட்டு வாசல் முன்பு செறுப்புகளை கட்டி வைத்ததாகவோ, எதிரிகள் அனைவரும் கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அ.சா.1 குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

8.4). மேலும், புகார் கொடுத்த சாட்சியான அ.சா.1 ராணி தனது முதல் விசாரணையில், "**நான், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டேன். எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை**" எனவும் சாட்சியமளித்துள்ளார். எனவே, அரசுத்தரப்பும் நீதியின் நலன் கருதி மற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

8.5). எனவே, அ.சா.2-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக் கொண்டு அரசுத்தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது. எனவே, அரசுத்தரப்பு வழக்கை உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை எனக் கருதி, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்வு**

9). முடிவாக, 1 மற்றும் 2 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 427, 506(1)–ன் கீழும் மற்றும் 3 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 448, 506(1)–ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10). **கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு**:

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.10 17:58:37 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.ராணி | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திருமதி.கிருஷ்ணவேணி | கூடுதல் சாட்சி |

**<u>2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் மனு. | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | சமாதான மனு. | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | பார்வை மகஜர். | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம். | அ.சா.2 |

**<u>3). அரசுத்தரப்பு சான்றுப் பொருள்</u>**: இல்லை.

**<u>4). எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருள்</u>**: தாக்கல் இல்லை.

**<u>5). குறிப்பு</u>**:

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையிலிருந்து முன்னிலையானார்கள்.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.10 17:58:42 +0530

நீதித்துறை நடுவர்

போடிநாயக்கனூர்.